


மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.


இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 1




- கழுகும் அதன் குஞ்சுகளும்
- எருசலேமில் இந்த ஆண்டு - நற்செய்தியின் நம்பிக்கை
- நம்ப முடியவில்லை!

  *"தரித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை தியானித்துப் பாரும்."*
- கணவன் மனைவிக்கான பாக்கிய வசனங்கள்
- நல்லவைகளும் ஆகாதவைகளுமான மீன்கள்
  நியாயத்தீர்ப்பின் நாள்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christesdelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களியிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூற வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.


ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk



### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

லினஸ் டேனியேல் : ஒருங்கிணைப்பாளர்

ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்

பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.


இந்த பத்திரிக்கையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிக்கையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# கழுகும் அதன் குஞ்சுகளும்

தேவன் தம் மக்கள் மேல் கொண்டுள்ள கரிசனையை, இஸ்ரவேலுக்கு அவர் கூறிய வார்த்தைகளில் அழகாக வெளிப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம். "நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையில் சேர்த்துக் கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள்" (யாத்திராகமம் 19:4).

இஸ்ரவேல் மக்களுக்குத் தெரிந்த பறவைகளிலே மிகவும் பெரியதான கழுகு அதிகவேகமாகக் கீழிறங்கி மேலெழும்பிப் பறக்கும் காட்சி, வேதத்தை எழுதியோரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. நவீன காலங்களில், தன் குஞ்சைப் பிடித்துக் கொண்டே பறக்கும் கழுகைக் காணலாம். இது வேதாகமத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. "கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, தன் செட்டைகளின் மேல் சுமந்து கொண்டு போகிறது போல," (உபாகமம் 32:11).




சின்ன கழுகுக் குஞ்சு முதலில் பறப்பதற்கு பயப்படலாம். ஆனால் அது கூட்டினின்று வெளியே பறக்கும்படி தாய்க்கழுகு கட்டாயப்படுத்துகிறது. சரியாகப் பறக்க முடியாத குஞ்சு இறக்கைகளைப் படபடவென அடித்துக் கொண்டு கீழே விழ ஆரம்பிக்கலாம். அப்பொழுது தாய்க்கழுகு கீழ்நோக்கிப் பறந்து, தன் பாதுகாக்கும் செட்டைகளை விரித்து, கீழே விழும் குஞ்சுக்கு அடியிலே வந்து அதைத் தாங்கிக் கொள்கிறது. துன்ப நேரத்தில் தேவனின் தாங்கிக் காக்கும் பிரசன்னத்தை வாக்குப் பண்ணும் வசனத்தில் இந்தக் கற்பனைக் காட்சி காணப்படுகிறது. "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" (உபாகமம் 33:27).

தேவனுடைய மக்களின் நீண்ட கால வரலாற்றில், தேவன் தங்கள் மேல் அக்கரையும் கரிசனையும் உள்ளவராயிருக்கிறார் என்ற நம்பிக்கை மற்றும் விசுவாசத்தினால் தாங்கி நிலைநிறுத்தப்பட்டார்கள் எனக் காண்கிறோம். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் நாம் காணும் பரிசுத்தவான்களிலும் இது அதே அளவு உண்மையாயிருக்கிறது. தேவன் தம் சிருஷ்டிகள் அனைத்தின் மேலும் அக்கரை உள்ளவர் தாம். ஆனால் குறிப்பாக அவர் அழைத்திருக்கிறவர்கள் மற்றும் அந்த அழைப்பிற்கு இணங்கி அவரின் மக்களாவதற்கு அவரிடம் வந்தவர்கள் மேல் தேவன் விசேஷித்த விதமாய் கரிசனை காண்பிக்கிறார். அப்படி யென்றால் வாழ்க்கையில் அவர்களுக்கு இடர்கள் வருவதில்லை என்று பொருளல்ல. அநேக துன்பங்களை தேவனுடைய மக்கள் சகித்து, மேற்கொள்வார்கள் என்பதே இதன் பொருள். ஏனெனில், கர்த்தர் அவர்களுக்காக கவலைப் படுகிறார் என்றும், அவர்கள் 'கழுகுகளின் செட்டை'களில் தாங்கப்படுகின்றார்கள் என்றும் 'நித்திய புயங்கள் அவர்களின் ஆதாரம்' என்றும் அறிந்திருக்கிறார்கள்.

# எருசலேமில் இந்த ஆண்டு - நற்செய்தியின் நம்பிக்கை

பாகம் - 1

'சுவிசேஷம்' என்ற வார்த்தையின் பொருள் 'நற்செய்தி' என்பதாகும். கெட்ட செய்தி நிரம்பிய உலகில் நற்செய்தி குறைவாகத் தான் கிடைக்கிறது. பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மனித குலத்தை இரட்சிக்கவும் நித்திய ஜீவனை அளிக்கவும் தேவன் தமது குமாரனை உலகிற்கு அனுப்பினார் என்பதே ''கிறிஸ்துவின் சுவிசேஷம்'' எனும் நற்செய்தியாகும். நன்மைக்கேதுவான இத்தகைய மாற்றம் உண்மையில் நற்செய்தியே என மார்க் ஆல்ஃப்ரீ தொடர்ந்து விளக்குகிறார்.



## கிறிஸ்துவின் சுவிசேஷம்

''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16) என பவுல் அப்போஸ்தலன் ஒரு முறை கூறினார். அவர் வெட்கப்படவில்லை, ஏனெனில் ''கிறிஸ்துவின் சுவிசேஷம்" அவருக்கு ஜீவன் காக்கும் நம்பிக்கையை அளித்தது என தீத்துவுக்கு எழுதினார்.

''தேவனுடைய ஊழியக்காரனும் இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல்... பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி, அதைக் குறித்த நம்பிக்கையைப் பற்றி தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி.... தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்" (தீத்து 1:1,3-4).

இந்த மகத்தான எதிர்காலத்திற்காக விசுவாசிகள் எதிர்பார்த்திருக்கலாம். நாம் மட்டும் உத்தமமாய் அவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தோமேயாயின், தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தருவதாக வாக்கருளியிருக்கிறார்.

## எப்போது நிஜமாகும்?

இந்த நம்பிக்கை நிஜமாகும் என நாம் எப்பொழுது எதிர்பார்க்கலாம்?




கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமிக்குத் திரும்ப வருவாரென்றும், அந்த சமயத்தில் உண்மையான விசுவாசிகளுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும் என்றும் வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. பவுல் தீத்துவுக்கு இங்ஙனம் விளக்குகிறார்.

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சிகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" (தீத்து 2:13).

மெய்க் கிறிஸ்தவர்கள் யாவரும் இதற்காகவே எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதாவது இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு. ஏனெனில் அந்தச் சமயத்தில் தான், அதற்கு முன் அல்ல - தேவனுக்கு உண்மையாய் இருந்தவர்கள் நித்திய ஜீவன் எனும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வார்கள். அதனால் தான் நற்செய்தியின் நம்பிக்கையை "நித்திய ஜீவனின் நற்செய்தி" என அழைக்கலாம். ஆனால் இதற்கு வேறு பெயர்களும் உண்டு. அவைகள் தேவனின் நற்செய்தி எவ்விதம் நிறைவேறும் என மேலும் விளக்குகின்றன.

## இஸ்ரவேலின் நம்பிக்கை

ரோமாபுரியில் விசாரணைக்காக, பவுல் அப்போஸ்தலன் வீட்டுக் காவலில் இருந்த பொழுது, தன்னைத் தலைநகருக்குக் கொண்டு வந்தது எது என விளக்கினான். "இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன்.'' என்றான் (அப்போஸ்தலர் 28:20).



பவுல் இப்படிச் சொல்லும்போது, அவருடைய வாழ்க்கை கிட்டத்தட்ட முடியும் தருவாயில் இருந்தது. அது அவருக்குத் தெரிந்தும் இருந்தது. மரண தண்டனையை எதிர்நோக்கியிருந்தார். இருப்பினும் நித்திய ஜீவன் பற்றிய நம்பிக்கை அவருக்கு இருந்தது. மேலும் இந்த நம்பிக்கை இஸ்ரவேல் தேசத்தை மையமாகக் கொண்டது எனவும் கண்டார். அது ஏன் அப்படி? பவுல் ஏன் தனது நம்பிக்கையை இஸ்ரவேல் தேசத்தோடு சேர்த்துப் பேசினார்? நித்திய ஜீவன் குறித்த நம்பிக்கைக்கும் இஸ்ரவேலுக்கும் என்ன சம்பந்தம்? சற்றே ஆராய்ச்சி செய்தால் இந்த நற்செய்தியின் நம்பிக்கையுடன் இஸ்ரவேலுக்குப் பெரிதும் தொடர்பு இருப்பது தெரியவரும்.

## கர்த்தருடைய சிங்காசனம்

ஏறத்தாழ கி.மு. 1000ல் தாவீது ராஜாவின் காலத்தில் இஸ்ரவேல் மக்கள்

முன்பு எபூசியரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த எருசலேம் கோட்டையைப் பிடித்தார்கள். ஆகவே, எருசலேம் பட்டணத்திலிருந்தவாறு இஸ்ரவேலின் மேல் 33 வருடம் ஆட்சி செலுத்திய முதல் அரசன் தாவீது. தாவீதுக்குப் பின் அவன் மகன் சாலொமோன் அரியணை ஏறினான். அவனைப் பற்றி மிக முக்கியமான விஷயம் ஒன்றை நாம் வாசிக்கிறோம்.

“சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் ராஜாவாய் வீற்றிருந்து பாக்கியசாலியாயிருந்தான். இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள்” (1. நாளாகமம் 29:23).

சாலொமோன் ‘‘கர்த்தருடைய சிங்காசனத்தில்’’ வீற்றிருந்தான் என்பதை கவனித்துப் பாருங்கள். அவனும் அவன் தகப்பனாகிய தாவீதும் எருசலேமில் அரசாண்ட போது, உண்மையில் அவர்கள் கர்த்தருடைய சிங்காசனத்தில் தான் வீற்றிருந்தார்கள்.

இதற்கு அழுத்தம் கொடுப்பதற்காக, இருமுறை கூறப்பட்டிருப்பதால் (1. நாளாகமம் 28:5 காண்க) இது எவ்வளவு முக்கியம் என்று தெரிகிறது. இதிலிருந்து நாம் மிக முக்கியமான அடிப்படை முடிவுக்கு வருகிறோம். அதாவது தாவீது ராஜாவும், அவனுக்குப் பின் அவன் மகனும் ஆண்ட இஸ்ரவேல் ராஜ்யம் உண்மையில், பூமியிலே தேவனுடைய ராஜ்யமாயிருந்தது. முற்காலத்தில் இருந்த இஸ்ரவேல் தேசம் தேவனுடைய ராஜ்யமாயிருந்தது.

## தேவனுடைய ராஜ்யம் காணாமற் போனது

மகிழ்ச்சிகரமான இந்த நிலைமை என்றென்றுமாய் தொடரவில்லை. இஸ்ரவேல் தேவனுடைய ராஜ்யமாய் இருந்தும், அந்த ராஜ்யத்தின் தலைநகரமாய் எருசலேம் இருந்தாலும், அது ஒரு முடிவுக்கு வந்தது. தாவீது மற்றும் சாலொமோனின் நாட்களுக்குப் பின், தொடர்ந்து பல அரசர்கள் எருசலேமில் இருந்து இஸ்ரவேலை ஆண்டார்கள். தாவீதைப் போல் சிலர் நல்ல அரசர்களாய் இருந்தார்கள். ஆனால் பெரும்பான்மையானோர் பொல்லாதவர்களாய் இருந்தார்கள். கடைசி அரசன் சிதேக்கியா கி.மு. 600ல் ஆட்சி செய்தான். அவன் ஒரு பொல்லாத அரசன். அவனைக் குறித்து எசேக்கியேல் தீர்க்கதரிசி இவ்வாறு கூறுகிறார்.

‘‘இஸ்ரவேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவு வருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன்; கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்” (எசேக்கியேல் 21:25-27).

இஸ்ரவேல் ராஜ்யம் காணாமற் போகும் (அழிந்து போகும்) நிலை வந்தது. அதன் பொல்லாப்பினிமித்தம் கவிழ்க்கப்படும் நிலைவந்தது. பாபிலோனின் அரசன் நேபுகாத்நேச்சார் படையெடுத்து வந்து, சிதேக்கியாவையும் யூதர்களையும்





பாபிலோனுக்குக் கைதிகளாகக் கொண்டு போனபோது, இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது.

அந்த நாளிலிருந்து இன்று வரை இஸ்ரவேலில் அரசன் இருந்ததில்லை. இன்று வரை தாவீதின் சிங்காசனம் எருசலேமில் காலியாகவே இருக்கிறது. எழுபது ஆண்டுகளுக்குப் பின் யூதர்களில் சிலர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து, இஸ்ரவேல் தேசம் உருவாக்கப்பட்டது. உண்மை தான் இந்த மக்களிடம் தான் இயேசு வந்தார். ஆனால் அங்கிருந்த யூதர்களோ ஒரு ராஜ்யமாக இல்லை. அரசன் என்று அவர்களுக்கு ஒருவரும் இல்லை. உண்மையில் ரோம சாம்ராஜ்யத்தைச் சார்ந்து நிற்கும் நாடாகத் தான் அது இருந்தது.

## தேவனுடைய ராஜ்யம் மீண்டும் வருதல்

சிதேக்கியாவுக்கு விரோதமாக எசேக்கியேல் கூறியவைகளை மிகக் கவனமாய்ப் பாருங்கள்.

“கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்” (எசேக்கியேல் 21:27).

ராஜ்யம் கவிழ்க்கப்பட்டுப்போகும் என்றாலும் அது என்றென்றுமாக அப்படி இராது. சிங்காசனத்திற்கு உரிமையானவர் ஒருவர் வருவார். அதன்பின் ராஜ்யம் அவருக்குக் கொடுக்கப்படும். யாரைக் குறித்து தீர்க்கதரிசி பேசுகிறார்?

எசேக்கியேல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பேசுகிறார். தாவீதின் சந்ததியிலிருந்து நேரடியாக இயேசு வந்தார். ராஜ வம்சத்தில் பிறந்த படியால், சிங்காசனத்தின் மேல் அவருக்கு உரிமை இருந்தது. மேலும் அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார். காபிரியேல் தூதன் மரியாளிடம் கீழ்க்கண்டவாறு கூறியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

“அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது” (லூக்கா 1:32,33).

இங்கே காபிரியேல் முன்னறிவித்தது : ஒரு நாளில்,

எருசலேமில் தாவீதின் சிங்காசனத்தை, தேவன் இயேசுவுக்குத் தருவார்.

அவர் என்றென்றுமாக இஸ்ரவேல் ராஜ்யத்தின் மீது ஆட்சி செய்வார்.

வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமாயின், தாவீதின் நாட்களில் இருந்து, பின் சிதேக்கியாவின் நாட்களில் அழிக்கப்பட்டுப் போன இஸ்ரவேல் ராஜ்யத்தை இயேசு கிறிஸ்து மீண்டும் கொண்டு வருவார் என காபிரியேல் மரியாளுக்குச் சொன்னான். தேவனுடைய ராஜ்யம் இன்னும் ஒருமுறை பூமியிலே ஏற்படுத்தப்படும்.

**இன்னும் நிறைவேறவில்லை**

இதைக்குறித்து கவனமாகச் சிந்தியுங்கள்; காபிரியேலின் இந்த வார்த்தைகள் இதுவரை நிறைவேறவில்லை. இயேசு இன்னும் எருசலேமில் அரசனாக ஒருபோதும் ஆட்சி செய்யவில்லை. ஏனெனில் அவர் யூதர்களால் புறக்கணித்துத் தள்ளப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டார். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபோது, பரலோகத்திற்கு எழுந்தருளிப்போனார்; இன்று வரை இயேசு அங்கு தான் இருக்கிறார்.

மேலும் இயேசு ஒருபோதும் தமது உலக வாழ்நாள் காலத்தில் எருசலேமில் ஆளுகை செய்யவேண்டுமென எதிர்பார்க்கவில்லை. எருசலேம் நகரத்தின் எதிர்காலத்தைப் பற்றி இயேசு கூறிய தீர்க்கதரிசனம் மூலமாக நாம் இதை அறிவோம்.

“அவர் (இயேசு) சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து அதற்காகக் கண்ணீர் விட்டழுது., உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்குங் காலத்தை நீ அறியாமற்போன படியால் உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு உன்னை வளைந்து கொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கும்... நாட்கள் உனக்கு வரும் என்றார்” (லூக்கா 19:41-44).

**காலதாமதம்**

எருசலேம் நகரம் அழிக்கப்பட்டுப் போகும் என்று இயேசு இங்ஙனம் முன்னறிவித்தார். அதற்கான காரணம் யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்துத் தள்ளியதே. 40 ஆண்டுகளுக்குப் பின்னர் (கி.பி.70ல்ரோமப் படைகள் வந்து எருசலேமை முற்றுகையிட்டபோது இது நிறைவேறியது. அது வீழ்ந்தபோது, ஒரு வயலை உழுவது போல், நகரத்தை உழுது போட்டார்கள். யூதர்களும் பூமியின் நான்கு மூலைகளுக்கும் சிதறிப்போனார்கள்.

59 ஆண்டுகளுக்கு முன்பு வரை சூழ்நிலை இப்படித்தான் இருந்தது. 1948ல் இஸ்ரேல் நாடு உருவானது. நவீன இஸ்ரேல், ஒரு நாடு தானே தவிர ஒரு ராஜ்யம் அல்ல. இன்றும் கூட இஸ்ரேலுக்கு ஒரு அரசன் கிடையாது.

அப்படியென்றால் லூக்கா 1ல் காபிரியேல் மரியாளுக்குச் சொன்ன வார்த்தைகள் என்னவாயிற்று ? இயேசு ராஜாவாக ஆளும் இஸ்ரவேல் ராஜ்யம் எப்பொழுது மீண்டும் தோன்றும் ?


இக்கேள்விக்கான பதில் அடுத்துவரும் பாகத்தில் கிடைக்கும்.



# எருசலேமில் இந்த ஆண்டு நற்செய்தியின் நம்பிக்கை

பாகம் - 2

முதலில் இருந்து பார்ப்பதானால் - வேதாகமம் போதிக்கும் மெய்யான சுவிசேஷ நம்பிக்கை, பூமியிலே தேவனுடைய ராஜ்யத்தை எருசலேமிலிருந்து ஆள்வதற்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ராஜாவாகத் திரும்ப வருவதை மையமாகக் கொண்டிருக்கிறது, என ஆசிரியர் தெளிவுபடுத்தியிருக்கிறார். இந்தக் கட்டுரையின் நிறைவாக தான் ஏற்கனவே கண்டவைகளைச் சுருங்கக் கூறி, இவற்றின் பொருள் என்ன என்று என மார்க் ஆல்ஃப்ரீ விளக்குகிறார்.



**இஸ்ரவேலின் நம்பிக்கை**

இப்பாடத்தின் முதல் பகுதியில், வேதாகமம் நமக்கு நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை அளிக்கிறது எனக் கண்டோம். அதை பவுல் அப்போஸ்தலன் “இஸ்ரவேலின் நம்பிக்கை” எனக் கூறினார். இப்படி, இரட்சிப்பைக் குறித்த நம்பிக்கை, இஸ்ரவேல் மக்களின் எதிர்காலத்தோடு முற்றிலும் சம்பந்தப்பட்டதாகவே காணப்படுகிறது.

தாவீது ராஜாவாக எருசலேமில் அரசாண்ட காலந்தொட்டு இஸ்ரவேலின் வரலாறை நாம் பார்த்தோம். உண்மையில், அவன் கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து அரசாண்டான் எனப் பார்த்தோம். (1. நாளாகமம் 28:5) இதிலிருந்து, ஒரு காலத்தில்

தேவனுடைய ராஜ்யம் பூமியில் இருந்தது என்ற முடிவுக்கு வந்தோம். ஆனால் அப்போது வாழ்ந்த அதன் குடிமக்கள் தேவன் அவர்களிடத்தில் எதிர்பார்த்த அளவின் படி வாழவில்லை. ஆகவே ஏறத்தாழ கி.மு. 600 ஆண்டுகளாக இஸ்ரவேல் ராஜ்யம் அக்கிரமத்தினிமித்தம் கவிழ்க்கப்பட்டுக் கிடந்தது.

**ராஜ்யம் - மீண்டும் வருதல்:**

அது நிகழ்வதற்குமுன், "உரிமைக்காரனானவரின்" தலைமையின் கீழ் ராஜ்யம் மீண்டும் நிறுவப்படும் ஒரு காலத்தைப் பற்றி எசேக்கியேல் தீர்க்கதரிசி முன்னறிவித்தார் (எசேக்கியேல் 21:25-27). இது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய ஒரு தீர்க்கதரிசனம். இயேசு பிறப்பதற்கு முன், காபிரியேல் தூதனால் மரியாளிடம் கூறப்பட்ட வார்த்தைகள் இதை உறுதி செய்கின்றன.

"இதோ, கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரிய வராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார், கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது." (லூக்கா 1:31-33).

காபிரியேல் கூறிய கடைசி வாக்கியம் நிறைவேறவே இல்லை. இயேசு பூமியில் இருந்த பொழுது ராஜரீகத்தைப் பெற்றுக் கொள்ளவும் இல்லை. மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எழுந்தருளிப்போகு முன் இயேசு எருசலேமில் ஒருபோதும் அரசாளவில்லை. ஆகவே இது எப்பொழுது நிகழும்? இயேசு ராஜாவாக இருக்கப்போகிற இஸ்ரவேல் ராஜ்யம் எப்போது மீண்டும் வரும்?

**இஸ்ரேலுக்கு ராஜ்யம் மீண்டும் கொடுக்கப்படுதல்.**

இந்தக் கேள்வி இயேசுவின் சீஷர்களுக்கும் புதிராகவே இருந்துவந்தது. அவர்களில் சிலர், இயேசு உயிர்த்தெழுந்தபின் அரசாள்வார் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் உயிர்த்தெழுந்தபின் அவரோடு சீஷர்கள் உரையாடிக் கொண்டிருக்கையில் இக்கேள்வியைக் கேட்டார்கள்.

"அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி:

ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத்

திரும்பக் கொடுப்பீர்? என்று கேட்டார்கள்." (அப்போஸ்தலர் 1:6.)

அப்பொழுதே, அங்கேயே இயேசு இஸ்ரவேலுக்கு ராஜ்யத்தை மீட்டுத் தருவார் என எதிர்பார்த்தார்கள். ஆனால் அங்ஙனம் நடக்கப்போவதாக இல்லை. இஸ்ரவேலின் மீட்பின் காலத்தை அறிகிறது அவர்களுக்கு அடுத்ததல்ல என இயேசு விளக்கிக்



கூறினார். அதைப் பிதா ஒருவர் மட்டுமே அறிவார் என்றார். இங்ஙனம் தம் சீஷர்களோடு கலந்துரையாடிய பின் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போனார். இன்று வரை அவர் அங்கேயே இருக்கிறார். இயேசு அவர்களை விட்டுப் போகும்போது, சீஷர்கள் என்ன சிந்தித்திருப்பார்கள் எனக் கற்பனை செய்து பாருங்கள்.

"இயேசு பரலோகத்திற்குப் போய்விட்டால் ராஜ்யம் எப்படி இஸ்ரவேலுக்கு மீண்டும் வரும்? இயேசுவே ராஜா - 'உரிமைக் காரனானவர்' அவர் சிங்காசனம் எருசலேமில் இருந்தாலும் சிங்காசனத்தில் அமர அவர் அங்கே இல்லை!"

அவர்கள் இக்காரியங்களைக் குறித்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில் இரண்டு தேவதூதர்கள் அவர்கள் முன் தோன்றி நிலைமையைத் தெளிவாகக் கூறினார்கள்.

"அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ வெண்மையான வஸ்திரம் தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, ங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசு எப்படி உங்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்போஸ்தலர் 1:10,11).

**தூதர் தந்த தீர்வு**

அவர்கள் கலக்கத்திற்கான விடை இங்கே கிடைத்தது! இயேசு திரும்பவும் பூமிக்கு வரப்போகிறார். அவர் வரும் அந்த சமயத்தில்தான் ராஜ்யபாரம் இஸ்ரவேலுக்கு மீண்டும் கொடுக்கப்படும். இயேசுவும் தமக்கு உரியதான எருசலேமின் ராஜரீகத்தை ஏற்றுக் கொள்வார். ஆகவே சுவிசேஷத்தின் நம்பிக்கையை பகிர்ந்து கொள்ள எருசலேமில் இதே செய்தியை உற்சாகமாக அவர்கள் பிரசங்கித்ததில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

''கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு ங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள். உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும், பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ளவேண்டும்" (அப்போஸ்தலர் 3:19-21).

**எதிர்கால உலகத் தலைநகரம்**

பூமியிலே தேவனுடைய ராஜ்யமாக இஸ்ரேல் மீண்டும் வரும்போது, எருசலேம் நகரம் மறுடியும் தேவனுடைய ராஜ்யத்தின் மகா தலைநகரமாக ஆகும். எரேமியா

தீர்க்கதரிசி அதை இவ்விதம் காண்கிறார்:

"அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள், சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள், அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்" (எரேமியா 3:17).

தாவீதின் சிங்காசனத்தை தாவீதே கர்த்தருடைய சிங்காசனம் என்றழைத்தபடி, எதிர்காலத்தில், இயேசு எருசலேமில் ராஜாவாக அரசாளும் போது, எருசலேம் கர்த்தருடைய சிங்காசனமாக இருக்கும். சொல்லப்போனால், தமது மகத்தான மலைப் பிரசங்கத்தில் இயேசுவே எருசலேமை 'மகாராஜாவின் நகரம்' என்று குறிப்பிட்டார் (மத்தேயு 5:35).

ஆனால், இயேசுவின் எதிர்கால ஆளுகை இஸ்ரவேலோடு நின்றுவிடும் என நாம் எண்ணக்கூடாது. தாவீது அரசனின் ஆளுகை முன்பு இருந்தது. ஆனால் பூமிக்கு இயேசு வரும்போதோ அவ்விதமாக இருக்காது, அவருடைய ராஜ்யம் முடிவில் உலகளாவியதாக இருக்கும் என தீர்க்கதரிசிகள் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தனர்:

"கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசாயா 2:2,3).

அநேக ஜனங்கள் ராஜாவைத் தொழுதுகொள்ளவும் தேவனுடைய கட்டளைகளைக் கற்றுக் கொள்ளவும் எருசலேமுக்குப் போவார்கள். அந்தக் கட்டளைகள் எருசலேமிலிருந்து வெளிப்படும். உண்மையில், பூமியின் ஜனங்களெல்லாரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வணங்கவும் ஆராதிக்கவும், ஆண்டுதோறும் எருசலேமுக்குப் போகும்படி எதிர்பார்ப்பார்கள். அவர்கள் அப்படிச் செய்யதவறினால் தேவனுடைய தியான பிரமாணங்களுக்கு அடங்கி நடக்கக் கற்றுக் கொள்ளும் வரை தண்டிக்கப்படுவார்கள். இதைத் தான் சகரியா தீர்க்கதரிசி முன்னறிவித்தார்.

"பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுது கொள்ளும்படிக்கும், கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்.



அப்பொழுது பூமியின் வம்சங்களில் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ அவர்கள் மேல் மழை வருஷிப்பதில்லை" (சகரியா 14:16,17).

## உலகளாவிய ராஜ்யம்

மெதுவாக - சிறிது சிறிதாக - கிறிஸ்துவின் ஆளுகை, இஸ்ரேலின் எல்லைகளுக்கப்பால் விரிவாகி முழு உலகையுமே, சகரியா சொல்வது போல், ஒருங்கிணைக்கும்.

"அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார், அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார். அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்." (சகரியா 14:9)

அப்படியானால், இந்த பரபரப்பான எதிர்கால சம்பவங்களில் நமது பங்கு தான் என்ன? இந்தத் தொடர் கட்டுரைகளில் இஸ்ரவேலின் நம்பிக்கை நமக்கும் கூடத்தான் என்று ஆரம்பத்திலேயே பார்த்தோம். ஏனெனில் நித்தியஜீவனைப்பற்றிய நம்பிக்கை அதிகமாக இஸ்ரேல் தேசத்தைச் சார்ந்ததாய் இருப்பதால் பவுல் அப்போஸ்தலனும் "இஸ்ரவேலின் நம்பிக்கை" எனக் குறிப்பிடுகிறார். இதற்கான காரணத்தை சகரியாவின் தீர்க்கதரிசனம் கூறுகிறது - ஏனெனில் தமது சிங்காசனத்தை எருசலேமில் ஸ்தாபிக்க கர்த்தரின் நாமத்தில் இயேசு திரும்ப வரும்போது, அவர் தனியே இருக்கமாட்டார்.

"…. ங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனது போல ஓடிப்போவீர்கள், என் தேவனாகிய கர்த்தர் வருவார், தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்" (சகரியா 14:5).

## இயேசுவும் அவரின் பரிசுத்தவான்களும்

இயேசுவோடே கூட 'பரிசுத்தவான்கள்' வருவார்கள். இவ்வுலகத்தின் காரியங்களிலிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டவர்களாய், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றத் தெரிந்துகொண்ட மக்களை வேதாகமம் இப்படி அழைக்கிறது. வரப்போகும் தேவனுடைய ராஜ்யத்தில் பரிசுத்தவான்கள் நித்தியஜீவன் எனும் பலனைப் பெற்றுக்கொள்வார்கள்.

அவருடைய வார்த்தையாகிய வேதாகமத்தில், நம்மெல்லாரையும் இந்தப் பரிசுத்தவான்களில் ஒருவராய் இருக்கும்படி தேவன் அழைக்கிறார். இவர்கள் இயேசுவின் வருகையின்போது அவரோடு இருப்பார்கள். ஏனெனில் இயேசு தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது அவருக்கு உதவியாளர்கள் தேவைப்படுவார்கள். தமது தியுள்ள ஆட்சிக்குள் அடங்கும்படி முழு உலகையும் கொண்டு வருவதற்கு அவரோடு சேர்ந்து செயல்படுவார்கள். அவர் ஜாதிகளை ஆளுகை செய்ய உதவுவார்கள். இயேசு தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது நாம் அவரோடே

கூட இருப்போம் என்னும் இந்த அற்புதமான நம்பிக்கையை நம் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷம் அளிக்கிறது. ஆண்டவராகிய இயேசு தம்மைப்பற்றி இவ்விதம் கூறுகிறார்.

“ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான், அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன்” (வெளிப்படுத்தல் 2:26-28).

## அழைப்பு

இது நம் ஒவ்வொருவர் வாழ்விலும் உண்மையாகலாம். நாம் ஒவ்வொருவரும் அவரோடு இருக்கவும், நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும், தியோடும் நியாயத்தோடும் ஜாதிகளை ஆள்வதற்கு உதவிசெய்யவும் இயேசு நம்மை அழைக்கிறார். இதற்குப் பதிலீடாக நம்மிடமிருந்து இயேசு எதை விரும்புகிறார்?

‘கடைசிவரை’ - அதாவது ராஜாவாக அவர் எருசலேமுக்குத் திரும்ப வரும்வரை நாம் அவருடைய கிரியைகளைக் காத்துக்கொள்ளவேண்டும் என இங்கே அவர் கூறுகிறார். அப்படியென்றால் நாம் வேதத்தைத் தினந்தோறும் வாசிக்கவேண்டும். அப்படிச் செய்வதனால் அதிலுள்ள வாக்குத்தத்தங்களையும் அதன் கட்டளைகளையும் நாம் கண்டுகொள்ளலாம். நாம் என்ன செய்ய வேண்டும் எனத் தெரிந்தபின், ஒவ்வொரு நாளும் கீழ்ப்படிதலோடு நடக்க வேண்டும்.

**மார்க் ஆல்ஃப்ரீ**



# நம்ப முடியவில்லை!



விலங்கியல் குழுவினர் ஓர் அறையில் குறுக்கும் நெடுக்குமாகப் பட்டு நூல்களைக் கட்டினார்கள். பின்னர் குருடாக்கப்பட்ட சில வௌவால்களை அந்த அறையில் பறக்கவிட்டார்கள். கீச்' எனக் கத்திக் கொண்டே, நூலைகளைத் தொடாமல் அறையின் ஒரு மூலையிருந்து அடுத்த மூலைக்குப் பறந்து சென்றன. ஆனால் அவைகளின் காதுகளை அடைத்துப் பறக்க விட்டபோது தடுமாறியது மட்டுமல்லாமல் நூல்களுக்கிடையே சிக்கிக் கொள்ளவும் செய்தன. ஆகவே அறிவியலார் கண்ட உண்மை யாதெனில், ‘ரேடார்' மற்றும் ‘சோனார்' முறை போன்ற எதிரொலி மூலமாகத்தான் வௌவால்கள் பறக்கின்றன. இதை சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் தான் கண்டுபிடித்தார்கள். இத்தகைய ஏற்பாட்டிற்கு ஒலி எழுப்பும் சாதனம் ஒலி வாங்கும் சாதனம், ஒலியைப் பகுத்தறியும் சாதனம் ஆகிய இவை அத்தனையும் ஒருங்கே அமைக்க வேண்டும். ஆகவே வௌவால் ஆண்டவரின் அற்புதப்படைப்புகளில் ஒன்று.

*“தரித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை தியானித்துப் பாரும்." யோபு 37:14*

**பரிணாமம்....? வேடிக்கைதான்!**



பயிற்சி பெற்ற எந்த ஒரு டால்ஃபினும் ஒலி எழுப்புபோது, பொருள்கள் மேல் மோதி பின் மேலெழும்புகிறது. எதிரொலிகளின் திசையும் திரும்பிவர எடுத்துக்கொள்ளும் நேரமும், பொருள்கள் இருக்கும் இடத்தையும் தூரத்தையும் காட்டுகின்றன. டால்ஃபின்கள் தாங்கள் போகும் இடத்தை அறிவதும் இம்முறையில்தான்.

பரிணாமக் கொள்கையினர் டால்ஃபின் தான் வௌவாலுக்கு இம்முறையைக் கற்றுக் கொடுத்தது எனவாதாடலாம். அதுசரியல்ல. சிருஷ்டிகர் வார்த்தையைப் பேசி, இவைகளின் மூளையில், உள்ளுணர்வு சார்ந்த ஆற்றல்களை வைத்தார். ஆகவே தான் அவை ஒரே விதமான முறையைக் கையாண்டு தங்கள் வழியை அறிகின்றன.

ரேடார் மற்றும் சோனாரை வடிவமைத்தவர்கள் மிருகங்களின் எதிரொலி மூலம் இடம் காணும் முறை பற்றி ஆராய்ச்சி செய்து பயனடையலாம் என்று தெரிந்துகொண்டார்கள். ஆகவே மனிதரும் இந்த உயிரினங்களிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடும் என்பது தெளிவாகிறது. பரிணாமம் என்பது ஒரு வேடிக்கையான கொள்கைதான் எனவும், அனைத்து ஞானமும் தேவனிடமிருந்து வருகிறதென்றும் கற்றுக்கொள்ளலாம்.

# கணவன் மனைவிக்கான பாக்கிய வசனங்கள்

தங்கள் வாழ் நாட்களெல்லாம் தொடர்ந்து பாசமாகவும், கரிசனையாகவும் அன்பாகவும் ஒன்றாகச் சேர்ந்து இருக்கும் கணவனும் மனைவியும் பாக்கியவான்கள்.

தங்கள் நண்பர்களிடம் இருப்பது போல், ஒருவருக்கொருவர் பணிவாகவும் மரியாதையாகவும் இருக்கும் கணவனும் மனைவியும் பாக்கியவான்கள்.

நகைச்சுவையுணர்வுள்ள கணவனும் மனைவியும் பாக்கியவான்கள். ஏனெனில் அவ்வுணர்வு எவ்வித அதிர்ச்சியையும் தாங்க உதவும்.



உலகில் வேறு எந்த நபரையும் விட ஒருவரை ஒருவர் நேசிப்பதோடு, வாழ்க்கை முழுவதும் கணவன் மனைவிக்கும் மனைவி கணவனுக்கும் கொடுத்த திருமண வாக்கை நிறைவேற்றும் தம்பதியர் பாக்கியவான்கள்.

தங்களது ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நன்றி கூறி, வேத வாசிப்புக்கும் ஜெபத்துக்கும் ஒவ்வொரு நாளும் நேரம் ஒதுக்கும் கணவன் மனைவி பாக்கியவான்கள்.

கடின வார்த்தை பேசுவதைத் தவிர்த்து, ஊக்கத்தையும் அன்பையும் தங்களுக்குள் பரிமாறிக்கொள்ளும் இடமாகத் தங்கள் இல்லத்தைப் பேணும் கணவன் மனைவி பாக்கியவான்கள்.

கிறிஸ்து மற்றும் அவரது ராஜ்யத்தின் மேம்பாட்டிற்காகத் தங்கள் வாழ்க்கையையும் குடும்பத்தையும் அர்ப்பணிக்கும் கணவனும் மனைவியும் பாக்கியவான்கள்.




# நல்லவைகளும் ஆகாதவைகளுமான மீன்கள் நியாயத்தீர்ப்பின் நாள்

இயேசுவானவரின் அநேக உவமைகளைப் போல் இந்த உவமையும் மிக எளிமையானதே. வலை போட்டோ தூண்டில் பயன்படுத்தியோ மீன்படிப்பவருக்கு என்ன மீன் கிடைக்கும் என்பது பற்றி அந்த மீனைப் பார்க்கும்வரை தெரியாது. இது படகிலே சென்று வலை போட்டு மீன் பிடிக்கும் மீனவர்கள் விஷயத்திலும் பொருந்தும். வலையிலுள்ள மீன்களைக் கவனமாகப் பார்த்த பின்னரே மீனவர்கள் நல்லவைகளைத் தேர்ந்தெடுத்து, ஆகாதவைகளை எறிந்துவிடக் கூடும். உவமையின் சாரம் இதுவே.

"அன்றியும் பரலோக ராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள்" (மத்தேயு 13:47-48).

இந்த உவமையோடு சேர்த்து இன்னொரு விவரமும் சொல்லப்பட்டுள்ளது. இந்த உவமையின் பொருளை இயேசுவானவர் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்.



"இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவ தூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்." (மத்தேயு 13:49,50)

இந்த உவமை நற்செய்தி மக்களின் மற்றும் நியாயத்தீர்ப்பு நாளைக் குறித்த மறுமொழியை விளக்குகிறது. அந்த நாளில் தேவன் தமது பிரதிநிதியான கிறிஸ்து மூலமாக மனுக்குலத்திற்கு தம் நியாயத்தீர்ப்பை அறிவிப்பார். அதன் விளைவாக மக்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும் அல்லது அவர்கள் அழிக்கப்படுவார்கள். இதை நாம் புரிந்து கொள்ள பிற வேத பகுதிகளையும் காண்போம்;

"மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்" (மத்தேயு 16:27).

தாலந்துகள் பற்றி உவமை மற்றும் வெள்ளாடுகள் செம்மறியாடுகள் பற்றிய உவமை ஆகிய இரண்டுமே நியாயத் தீர்ப்பையும், இரு வகுப்பினராக மக்கள் பிரிக்கப்படுதலையும் தெளிவாகக் கூறுகின்றன; ஏற்றுக்கொள்ளப் படுபவர்கள் தங்கள் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள்; ஏற்றுக் கொள்ளப்

படாதவர்கள் புறம்பான இருளுக்குள் தள்ளப்படுவார்கள். பவுல் அப்போஸ்தலனும் தெளிவாகவே கூறுகிறார்;

"சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்." (2. கொரிந்தியர் 5:10)

பூமி முழுவதற்கும் நியாயாதிபதியான அவர் (தேவன்) நியாயத்தீர்ப்புச் செய்யும்படியான அதிகாரம் முழுவதையும் குமாரனுக்குக் (இயேசு) கொடுத்திருக்கிறார். அவர் வெளிப்படும்போது அதை நிறைவேற்றுவார்.

யார் நியாயத்தீர்ப்புக்கென எழுப்பப்படுவார்கள்? தானியேல் 12:2ல் எல்லாரும் எழுப்பப்படுவார்கள் எனக் கூறப்படவில்லை. ".....நித்திர பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் ...... விழித்து எழுந்திருப்பார்கள்" எல்லாரும் அல்ல. அப்படி எழுந்திருப்பவர்களில் சிலர் மட்டும் தான் அழியாமையைத் தரித்துக் கொள்வார்கள்; மற்றவர்கள் தண்டிக்கப்படுவார்கள். "சிலர் நித்திய ஜீவனுக்கும் சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" (தானியேல் 12:2).

நற்செய்தியை விசுவாசிப்பதின் மூலம் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவது சாத்தியமாகிறது. மாற்கு இவ்விதம் எழுதுகிறார். ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15:16). நற்செய்தியின் வார்த்தைகள் தாம் விசுவாசிப்பதற்கான ஆதாரமாகின்றன.

அத்தேனே பட்டணத்தில் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் பவுல் இதையே கூறினான்.

"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போல் இருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர், தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார்" (அப்போஸ்தலர் 17:30,31).

(குறிப்பு : இந்த மற்றும் பிறபோதனைகளில் (பொதுவான நம்பிக்கைக்கு மாறாக) நாம் கவனிக்கத் தகுந்தது யாதெனில், மரணத்திற்குப் பின் நாம் மோட்சம் / நரகத்திற்குப் போவதில்லை. ஆனால் ஒரு உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருப்போம். (மரணநிலையிலிருந்து மீண்டும் உயிருள்ள நிலைக்கு வருவது) அதைத் தொடர்ந்து வருவது நியாயத்தீர்ப்பு. மரணத்திற்குப் பின் ஒன்றுமில்லாத ஒரு நிலைக்குள்ளாகிறோம். அல்லது தானியேல் தீர்க்கதரிசியின்




புத்தகத்திலுள்ளதுபோல் 'நித்திரை' அடைகிறோம்.

## நியாயத்தீர்ப்பில் என்ன நடக்கும்?

உவமைகள், நேரடிப் போதனைகள் ஆகிய இரண்டிலுமே நியாயத்தீர்ப்பின் சம்பவங்கள் தரப்பட்டுள்ளன. இவை அனைத்திலுமே ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் அழியாமையைப் பெறுவார்களென்றும், தள்ளப்பட்டு தண்டிக்கப்படுகிறவர்கள் சந்தேகத்துக்கிடமில்லாமல் பிரிக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. நல்லவை மற்றும் ஆகாத மீன்கள் எனும் உவமையில் காணப்படும் போதனையும் இதுவே. பிற வேத பகுதிகள் கணக்கு ஒப்புவிப்பதைக் குறித்துப் பேசுகின்றன. எடுத்துக்காட்டாக பிரயோஜனமான மற்றும் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்கள், தாலந்துகள், ராத்தல்கள் பற்றிய உவமைகள் ஆகும். ரோமர் 14:12 கூறுவதாவது :

''நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்."



தகுதியென நியாயந்தீர்க்கப்பட்டவர்கள் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டு, இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக, கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராவார்கள். இத்தகைய எதிர்காலம், மக்கள் கீழ்ப்படிதலுள்ள சீஷத்துவத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்க உற்சாகப்படுத்துகிறது.

பவுல் கூறுவதாவது : ''நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே......... சத்தியத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு....... உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்" (ரோமர் 2:5,8,9).

உண்மையின்படி இந்த நியாயத்தீர்ப்புகளில் அடங்கியுள்ளவை பற்றி நமக்கு துல்லியமாக தெரியாது. ஆனால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவைகளை மனுக்குலம் அனுபவிக்கும் என்பது திட்டமானது.

நன்மை செய்யும்படி நம்மை உற்சாகப்படுத்துவதோடு வரப்போகும் அழிவைக் குறித்து எச்சரிக்கும் ஓர் எளிய முறைதான் நல்லவையும் ஆகாதவையுமான மீன்களைப் பற்றிய உவமை.

இதற்கிடையில், ஜீவனும் தருணமும் இருக்கும்போதே, தினமும் நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய நாட வேண்டும்.

''உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது?" கொஞ்சக்காலந் தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே" (யாக்கோபு 4:14).